We Shine Academy™
guiding you to get through

# தினசரி நடப்பு நிகழ்வுகள்

பிப்ரவரி
14
14-02-2021

Useful for TNPSC, POLICE Exams

# உலக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- ஐ.நா.வின் அடுத்த பொதுச் செயலர் பதவிக்கு நடைபெறவிருக்கும் போட்டியில் இந்திய வம்சாவளி ஐ.நா. ஊழியர் ஆகாங்ஷா ஆரோரா போட்டியிடுகிறார்.
  - அவர் ஐ.நா மேம்பாட்டுத் திட்டத்தில் தணிக்கை ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வருகிறார்.
  - தற்போதைய ஐ.நா பொதுச் செயலர் அன்டோனியோ குட்டேரஸின் பதவிக்காலம் டிசம்பர் 31ம் தேதி நிறைவடைகிறது மேலும் 5 ஆண்டுகளுக்கு அந்த பொறுப்பை வகிக்க விருப்பம் தெரிவித்து அதற்கான போட்டியில் குட்டெரெஸ் மீண்டும் பங்கேற்கிறார்.

- சிரியா அரசின் கோரிக்கையை ஏற்று அவசர உதவிக்காக சுமார் 2000 மெட்ரிக் டன் அரிசி மூட்டைகளை இந்தியா பரிசாக அனுப்பியது.
  - சிரியாவில் அதிபர் ஆசாத்துக்கும் ஐஎஸ் தீவிரவாதிகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வரும் சண்டை இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளது. இதில் ஆசாத்துக்கு ரஷ்யா ஆதரவளித்து வருகிறது. கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது.

- பிரிட்டன் மற்றும் தென் ஆப்ரிக்க கரோனா வைரஸீகளுக்கு எதிராக பைஸர் கரோனா தடுப்பு மருந்து சிறப்பாக செயல்படுவதாக ஆக்ஸ்போர்ட் பல்கலை கழகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

# இந்திய செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- குடும்ப ஓய்வூதியம் தொடர்பான முக்கிய சீர்திருத்தமாக, குடும்ப ஓய்வூதியத்திற்கான உச்ச வரம்பு மாதத்திற்கு ரூ.45,000ல் இருந்து ரூ.1,25,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
  - இரு குடும்ப ஓய்வூதியங்களுக்கான அளவு மாதத்திற்கு ரூ.1,25,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முந்தைய அளவை விட இது 2.5 மடங்கு அதிகம்.

- கனடாவில் உள்ள ரெஜினா பல்கலைகழகத்தின் மெக்கென்சி கலைகூடத்தில் வைக்கப்பட்டிருந்த பெண் கடவுள் அன்னபூரணி சிலை இந்தியா கொண்டு வரும் நடவடிக்கையை கலாச்சாரதுறை மேற்கொண்டு வருகிறது.
  - மெக்கென்சி கலை கூடத்தில் வைக்கப்பட்டிருந்த உணவுக் கடவுள் அன்னபூரணியின் சிலையை பார்வையிட்ட திவ்யா மெஹ்ரா என்ற கலைஞர் இச்சிலை இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கடத்தி வரப்பட்டிருக்கலாம் என கேள்வி எழுப்பினார்.
  - சிலை நவம்பரில் ஒட்டாவாவில் உள்ள இந்திய தூதர் அஜய் பிசாரியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

# தமிழக செய்திகள்

We Shine Academy
Guiding you to get through

- தமிழக உள்ளாட்சி துறை கடந்த 10 ஆண்டுகளில் 143 மத்திய அரசின் விருதுகளை பெற்றுள்ளது. இதில் ஊரக வளர்ச்சித் துறை மட்டும் 122 விருதுகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.
  - ஊரக வளர்ச்சி திட்டங்களை, சிறப்பாக செயல்படுத்தியதற்காக 18 மாநிலங்களுக்கு இடையிலான தேசிய விருதுகள், 23 மாவட்டங்களுக்கு இடையிலான தேசிய விருதுகள், 17 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இடையிலான விருதுகள், 64 கிராம ஊராட்சிகளுக்கு இடையிலான தேசிய விருதுகள் என மொத்தம் 122 விருதுகளை தமிழக ஊரக வளர்ச்சிதுறை பெற்றுள்ளது.

- பொது சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் போராட்டக்காரர்களை இழப்பீடு வழங்க செய்யும் சட்டம் கொண்டு வர ஹரியானா அரசு திட்டமிட்டுள்ளது.

- பள்ளி மாணவர்களுக்கு நடந்தப்படும் தேசிய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெறுவோர் பரிசுத் தொகையுடன் ஒருவாரம் தென்கொரியா செல்லவும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது.
  - இந்திய பத்திரிக்கையாளர் சங்கம், வாய்ஸ் ஆ∴ப் கிட்ஸ், பெரிய கலாச்சார சங்கம், கொயாத்தே நிறுவனம் மற்றும் வளர்ச்சி மையம் ஆகியவை இணைந்து 9 முதல் 12ம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கு தேசிய கட்டுரைப் போட்டியை நடத்த உள்ளன. மார்ச் 15ம் தேதி வரை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்.

- ஐ.நா. நிலையான வளர்ச்சித் திட்டங்களில் உள்ள சவால்கள், கரோனா பெருந்தொற்றால் பாரம்பரியக் கல்வி முறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, அவற்றை எப்படி சரிசெய்யலாம், பாலினச் சமத்துவத்தை அடைவது எப்படி, கழிவுகள் மேலாண்மையை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பன குறித்த கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

- கோவில்பட்டி அருகே சொர்ணமலையின் மீது 135 அடி உயர முருகன் சிலை ஆசியாவிலேயே மிக உயரமான சிலையாக அமைய உள்ளது.
  - மானாமதுரை ஸ்ரீ மகா பஞ்சமுக பிரத்தியங்கிரா தேவசக்தி மடலய சுவாமிகள் இச்சிலைக்கான முழுப்பொறுப்பை ஏற்றுள்ளார்.
  - முருகன் சிலை 123 அடி உயரம், பீடம் 12 அடி என மொத்தம் 135 அடி உயரத்தில் அமைக்கப்பட உள்ளது.
  - மலேசியா பத்துமலையில் உள்ள 108 அடி உயர முருகன் சிலையை செய்த திருவாரூரை சேர்ந்த சிற்பி தியாகராஜன் குழுவினரால் இந்த சிலை உருவாக உள்ளது.

- பழநியில் 'எனது பூமி' எனும் தலைப்பில் 148 அடி நீளத்துக்கு 540 ஓவியங்களை வரைந்து கின்னஸ் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளார் சோபியா.
  - இவர் திண்டுக்கல் மாவட்டம் பழநியில் பழநியாண்டவர் கலைக்கல்லூரியில் படித்து வருகிறார். இதில் உலக நாடுகளின் தேசியக் கொடிகள், தலைவர்களின் படங்கள், விவசாயம், தமிழர் பண்பாடு குறித்த ஓவியங்களும் அடங்கும் இது பழநி அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

- சுருங்கிய இதய வால்வை அறுவை சிகிச்சை இல்லாமல் பலூன் மூலம் விரிவடையச் செய்யும் சிகிச்சை கோவை அரசு மருத்துவமனை இதயவியல் பிரிவில் நேற்று முதல் முறையாக இரு பெண்களுக்கு மேற்கொள்ளப்பட்டது.
  - ருமாட்டிக் இதயநோய் என்பது இதயத்தில் உள்ள வால்வுகள், தொண்டையில் ஏற்படும் நுண்கிருமி தொற்றால் பாதிக்கப்படுவதாகும்.
  - 'ருமாட்டிக் மைட்ரல் வால்வு' சுருக்கத்தை அறுவை சிகிச்சை இல்லாமல் விரிவடைய செய்யும் பயிற்சி மற்றும் கருத்தரங்கு கோவை அரசு மருத்துவமனையில் நேற்று நடைபெற்றது. இந்த சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

- 150 ஆண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேயர்கள் பரங்கிப்பேட்டையில் இந்தியாவின் முதல் இரும்பு உருக்காலையை உருவாக்கியுள்ளனர்.
    - பரங்கிப்பேட்டை 'போர்ட்நோவா' என ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் 1818ல் கிழக்கிந்திய கம்பெனியில் சிவில் ஊழியராக பணியாற்றிய ஜே.எம். ஹீத் என்பவர் சேலம் இரும்பு தாதுவிலிருந்து 55 முதல் 60 சதவிகிதம் தரமான இரும்பு கிடைக்கும் என இங்கிலாந்து அரசுக்கு தெரிவித்தது.

- 1825ல் இங்கிலாந்து சென்று இரும்பு உருக்கு குறித்த தொழில் நுட்பங்கள் அறிந்து 1830ல் அன்றைய ஆங்கிலேய அரசின் அனுமதி பெற்று கல்வராயன் மலையில் கிடைக்கும் இரும்பு தாதுவை ஆதாரமாக கொண்டு பரங்கி பேட்டையில் இரும்பு எ.்.கு ஆலையை நிறுவினர்.

# Expected Questions

We Shine Academy Guiding you to get through

1. ஐ.நா.வின் அடுத்த பொதுச் செயலர் பதவிக்கு நடைபெறவிருக்கும் போட்டியில் இந்திய வம்சாவளி சேர்ந்த யார் போட்டியிடுகிறார்?

விடை: ஐ.நா. ஊழியர் ஆகாங்ஷா ஆரோரா

2. தற்போதைய ஐ.நா பொதுச் செயலர் யார்?

விடை: அன்டோனியோ குட்டேரஸ்

3. சிரியா அரசின் கோரிக்கையை ஏற்று அவசர உதவிக்காக எவ்வளவு அரிசி மூட்டைகளை இந்தியா பரிசாக அனுப்பியது?

விடை: சுமார் 2000 மெட்ரிக் டன்

We Shine Online Classes
8939 144 344 | 8939 244 344

4. பிரிட்டன் மற்றும் தென் ஆப்ரிக்க கரோனா வைரஸீகளுக்கு எதிராக எந்த கரோனா தடுப்பு மருந்து சிறப்பாக செயல்படுவதாக ஆக்ஸ்போர்ட் பல்கலை கழகம் நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது?

விடை: பைஸர்

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

5. குடும்ப ஓய்வூதியம் தொடர்பான முக்கிய சீர்திருத்தமாக, குடும்ப ஓய்வூதியத்திற்கான உச்ச வரம்பு மாதத்திற்கு ரூ.45,000ல் இருந்து எவ்வளவாக உயர்த்தப்பட்டுள்ளது?

விடை: ரூ.1,25,000

6. குடும்ப ஓய்வூதியத்திற்கான உச்ச வரம்பு முந்தைய அளவை விட இப்போது எவ்வளவு அதிகமாக உள்ளது?

விடை: 2.5 மடங்கு

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

7. கனடாவின் இந்திய தூதர் யார்?

விடை: அஜய் பிசாரியா

8. தமிழக உள்ளாட்சி துறை கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசின் எத்தனை விருதுகளை பெற்றுள்ளது?

விடை: 143 விருதுகள்

9. தமிழக உள்ளாட்சி துறையில் ஊரக வளர்ச்சித் துறை மட்டும் கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசின் எத்தனை விருதுகளை பெற்றுள்ளது?

விடை: 122 விருதுகள்

10. பொது சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தும் போராட்டக்காரர்களை இழப்பீடு வழங்க செய்யும் சட்டம் கொண்டு வர எந்த அரசு திட்டமிட்டுள்ளது?

விடை: ஹரியானா அரசு

11. கோவில்பட்டி அருகே சொர்ணமலையின் மீது எத்தனை அடி உயரம் கொண்ட முருகன் சிலை அமைய உள்ளது?

விடை: 135 அடி

We Shine Online Classes

8939 144 344 | 8939 244 344

12. பழநியில் ‘எனது பூமி’ எனும் தலைப்பில் 148 அடி நீளத்துக்கு 540 ஓவியங்களை வரைந்து கின்னஸ் சாதனை முயற்சியில் ஈடுபட்டுள்ளவர் யார்?

விடை: சோபியா

13. சுருங்கிய இதய வால்வை அறுவை சிகிச்சை இல்லாமல் எதன் மூலம் விரிவடையச் செய்யும் சிகிச்சை கோவை அரசு மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது?

விடை: பலூன்

14. எத்தனை ஆண்டுகளுக்கு முன்னரே ஆங்கிலேயர்கள் பரங்கிப்பேட்டையில் இந்தியாவின் முதல் இரும்பு உருக்காலையை உருவாக்கியுள்ளனர்?

விடை: 150 ஆண்டுகள்

We Shine Academy
Guiding you to get through

15. பரங்கிப்பேட்டை ஆங்கிலேயர்களால் எவ்வாறு அழைக்கப்பட்டது?

விடை: 'போர்ட்நோவா'

We Shine Academy
Guiding you to get through

# February 13th Quiz Questions and Answers

1. தொடக்க நிறுவனங்களை ஊக்குவிக்க "**Chunauti**" என்ற முன்முயற்சியை ஆரம்பித்தவர் யார்?

a) ராஜ் நாத் சிங்

b) ரவிசங்கர் பிரசாத்

c) நிதின் கட்கரி

d) பியூஷ் கோயல்

Guiding you to get through
We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

2. தேசிய விளையாட்டு தினம் எந்த தேதியில் கொண்டாடப்படுகிறது?

a) ஏப்ரல் 11

b) ஜூன் 30

c) ஆகஸ்ட் 29

d) மே 10

We Shine Academy
Guiding you to get through

3. பிர் எந்த நாட்டின் நாணயம்?

a) கனடா

b) பிஜி

c) எத்தியோப்பியா

d) பிரான்ஸ்

We Shine Academy™ Guiding you to get through

4. ஹவ்லா மைதானம் எங்கே அமைந்துள்ளது?

a) கொல்கத்தா, மேற்கு வங்கம்

b) காந்தி நகர், குஜராத்

c) டிஸ்பூர், அசாம்

d) ஐஸ்வால், மிசோரம்

5. மனநல மறுவாழ்வுக்காக 'KIRAN' ஹெல்ப்லைன் சேவையை ஆரம்பித்த மத்திய அமைச்சர் யார்?

a) நிதின் கட்கரி

b) அர்ஜுன் முண்டா

c) ரவிசங்கர் பிரசாத்

d) தவர் சந்த் கெஹ்லோட்

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

# Today Quiz

We Shine Academy
Guiding you to get through

1. உலக உறுப்பு தானம் தினம் எந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது?

a) ஜூலை 15

b) ஆகஸ்ட் 13

c) ஜூன் 20

d) ஆகஸ்ட் 10

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

2. பிஹூ எந்த மாநிலத்தின் பாரம்பரிய நடனம்?

a) பீகார்

b) அசாம்

c) கர்நாடகா

d) தமிழ்நாடு

We Shine Academy
Guiding you to get through

3. சத்ராசல் ஸ்டேடியம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

a) பஞ்சாப்

b) கோவா

c) டெல்லி

d) சத்தீஸ்கர்

We Shine Academy
Guiding you to get through

4. **'Sputnik V'** என்ற பெயரில் **COVID-19** தடுப்பூசியை அதிகாரப்பூர்வமாக பதிவு செய்த உலகின் முதல் நாடு எது?

**a)** கனடா

**b)** அமெரிக்கா

**c)** பிரேசில்

**d)** ரஷ்யா

5. இந்திய தானிய சேமிப்பு மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் எங்கு அமைந்துள்ளது?

a) ராஞ்சி

b) மும்பை

c) ஹப்பூர்

d) டெல்லி

We Shine Online Classes 8939 144 344 | 8939 244 344

## திருக்குறள்

" நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்"

**விளக்கம்:**

நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை தீய இனத்தைவிடத் துன்பத்தை தரும் பகையும் இல்லை

# மிக்க நன்றி

We Shine Academy
Guiding you to get through